**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 19** **நாள்: 23.03.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-னை முன்னிட்டு, முதல்நிலை சரிபார்த்தல் நிறைவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை சட்டமன்ற தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யும்பொருட்டு கணினி குலுக்கல் முறையில் சுழற்சிக்கு உட்படுத்தி முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் (Randomisation) நிகழ்வு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தலைமையில் இன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-னை முன்னிட்டு, முதல்நிலை சரிபார்த்தல் நிறைவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் (VVPAT) கருவிகளை சட்டமன்றத் தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யும்பொருட்டு கணினி குலுக்கல் முறையில் சுழற்சிக்கு உட்படுத்தி முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் (Randomisation) நிகழ்வு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தலைமையில் இன்று (23.03.2026) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது.

இதில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கப்பட்டன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் (VVPAT) இயந்திரங்களின் முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு தொடர்பான விரிவான வழிமுறைகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் "Electronic Voting Machine" கையேட்டில் வழங்கப்பட்டுள்ளன. இதனை https://www.eci.gov.in/evm-vvpat என்ற இணையதளத்திலும் காணலாம்.

இந்த முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு, இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கிய EVM Management System (EMS) மூலம், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடத்தப்பட்டது.

முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வில் ஒதுக்கீடு நிறைவடைந்ததும், தொகுதி வாரியாக ஒதுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும்

வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களின் பட்டியல், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்கள், வருகின்ற சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-க்கு பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களிடம் ஒப்படைக்கப்படும். பின்னர், அவை சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வலுவான பாதுகாப்பு அறைகளில் (Strong Rooms), அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் காவல்துறை பாதுகாப்பில் வைக்கப்படும்.

போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் உறுதிசெய்யப்பட்ட பிறகு, முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வின் மூலம் ஒதுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களின் விவரங்கள் அனைத்து வேட்பாளர்களுக்கும் வழங்கப்படும்.

**சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகளின் விவரம்** :

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் | கட்டுப்பாட்டு கருவிகள் | வாக்காளர் சரிபார்க்கும் இயந்திரங்கள் |
|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 295 | 295 | 319 |
| 2. | எண்.12 பெரம்பூர் | 357 | 357 | 387 |
| 3. | எண்.13 கொளத்தூர் | 343 | 343 | 371 |
| 4. | எண்.14 வில்லிவாக்கம் | 306 | 306 | 331 |
| 5. | எண்.15 திரு.வி.க. நகர் (தனி) | 267 | 267 | 289 |
| 6. | எண்.16 எழும்பூர் (தனி) | 240 | 240 | 260 |
| 7. | எண்.17 இராயபுரம் | 232 | 232 | 252 |
| 8. | எண்.18 துறைமுகம் | 230 | 230 | 249 |
| 9. | எண்.19 சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி | 282 | 282 | 305 |
| 10. | எண்.20 ஆயிரம் விளக்கு | 296 | 296 | 321 |
| 11. | எண்.21 அண்ணா நகர் | 327 | 327 | 354 |
| 12. | எண்.22 விருகம்பாக்கம் | 373 | 373 | 404 |
| 13. | எண்.23 சைதாப்பேட்டை | 338 | 338 | 366 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | எண்.24 தியாகராயநகர் | 301 | 301 | 326 |
| 15. | எண்.25 மயிலாப்பூர் | 326 | 326 | 353 |
| 16. | எண்.26 வேளச்சேரி | 376 | 376 | 408 |
| **மொத்தம்** | | **4889** | **4889** | **5295** |

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்), அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**